**MCOP NO: 3947/2024 DATE: 24.07.2025**

ம.சா :1

பெயர் : திரு. சதிஷ்குமார்

த/பெ : திரு. பெருமாள்

வயது : 29

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 10 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

<u>**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

விபத்தின்போது நான் தான் வாகனத்தை ஓட்டிச்சென்றேன். விபத்தின்போது நான் வந்தவாசியிலிருந்து திண்டிவனம் செல்லும் மார்க்கமாக தையாருக்கு சென்று கொண்டிருந்தபோது காந்தாமணி ஐயர் பிளாட் அருகே இந்த விபத்து நடந்தது. காரானது எதிர்திசையில் வந்து என் வாகனம் மீது மோதி விபத்து ஏற்பட்டது. என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்யவில்லை. நான் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டத்தெரியாமலும் நான் வாகனத்தை ஓட்டியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட விபத்திற்கு உண்டான மருத்து செலவிற்கு ஆவணம் தாக்கல் செய்வில்லை. அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டதால் நான் மருத்துவ செலவு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. போக்குவரத்து செலவு ரூ.50,000/- ஆனதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 18.07.2024 பிறகு தொடர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேஸ்திரியாக வேலை செய்வதை காட்டுவதற்கோ, அதன் மூலமாக மாதம் ரூ.60,000/- ஈட்டி வந்தேன் என்பதை காட்டுவதற்கோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் தொடர் சிகிச்சை எதுவும் மேற்கொள்ளாததால் எனக்கு இந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் சரியாகி விட்டதால் எனக்கு வருமான இழப்போ, வருமான திறன் இழப்போ எனக்கு ஏற்படவில்லை. விபத்தினால் எனது வலது காலானது இடது

காலை விடை ஒன்றரை இஞ்ச் குறைந்துள்ளது. அதனால் என்னால் விபத்திற்கு முன்பு போல் தற்போது பணி செய்ய முடியவில்லை. மேற்படி விவரங்கள் காட்டுவதற்காக ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் காட்டுவதில்லை. நான் வழக்கிற்காக எனது வலது கால் இடது காலை விட ஒன்றரை இஞ்ச் குறைந்து விட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே எனக்கு அவ்வாறு குறைந்திருந்தால் அதற்கான உபகரணங்களை மருத்துவர் பரிந்துரைத்திருப்பார் என்றும் அவ்வாறு இல்லாததால் நான் சொல்லுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. விபத்தினால் எனக்கு ஏற்பட்ட காங்கள் அனைத்தும் குணமாகி விட்டதால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**x**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.